# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 9 | நாடகமும் அரங்கியலும் | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி I

* **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பாத்திரமொன்றில் காணப்படும் அனைத்து விடயங்களும் எப்பெயரால் அழைக்கப்படும்.
    1. வகிபாகம் 2. பாத்திரச்சித்தரிப்பு
    3. பாத்திரப்பண்புருவாக்கம் 4. பாத்திர ஒன்றிப்பு

02. பின்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலைவடிவம் அல்லாதது.
    1. நடனம் 2. நாடகம் 3. இசை 4. ஓவியம்

03. நடிகனின் குரல் வெளிப்பாடு.
    1. ஆங்கிக அபிநயம் 2. ஆஹார்ய அபிநயம்
    3. சாத்வீக அபிநயம் 4. வார்ச்சிக அபிநயம்

04. நாடக எழுத்துரு ஒன்றின் பிரதான மூலகங்களில் ஒன்று,
    1. பாத்திரம் 2. பார்வையாளர் 3. நெறியாளர் 4. நடிகன்

05. நாடகத்தில் இரண்டு பாத்திரங்கள் உரையாடுவது எவ்வாறு அழைக்கப்படும்.
    1. சொல்லாடல் 2. பாத்திரம் 3. மோடி 4. கரு

06. "சங்கிலியன் நாடகத்தை எழுதியவர் யார்?
    1. திலகநாதன் 2. சண்முகலிங்கம்
    3. கணபதிப்பிள்ளை 4. வித்தியானந்தன்

07. ஒருவர் பாத்திரம் ஏற்பது எவ்வாறு அழைக்கப்படும்.
    1. சித்தரிப்பு 2. ஊமம் 3. வகிபாகம் 4 நடிப்பு

08. பாத்திரமொன்றின் உடலியல் பண்பாக அமைவது
    1. உயர்ந்ததோற்றம் 2. அரசியல்வாதி
    3. கணீரென்றகுரல் 4. முற்கோபக்காரன்

09. ஊமம் சார்ந்த அரங்க விளையாட்டுக்களில் ஒன்று.
    1. ஆடும் வீடும் 2. பொற்சிலை '
    3. காகம் உயிர்ப்பெறல் 4. குருட்டு ஆட்டோ

10. "அரசனின் புத்தாடை" எனும் நாடகத்தின் ஆசிரியர்.
    1 சி.ஜெய்சங்கர் 2. வேலூர் சரவணன்
    3. மாவை.நித்தியானந்தன் 4..ம.சண்முகலிங்கம்

11. "மாணவன்" எனும் வகிபாகம் எக்காலத்திற்குப் பொருத்தமாகும்
    1. வீடு 2. வைத்தியசாலை 3. கோயில் 4. பாடசாலை

12. "ஒரு பாத்திரம் வெளிப்படுத்தி நிற்கும் உடற்தோற்றப்பாடு"
    1 மெய்நிலை 2. சித்தரிப்பு 3. அசைவு 4 நிலை

13. பாவத்தினை "மெய்ப்பாடு" என குறிப்பிட்டவர்.

1. பரதர் 2. அரிஸ்ரோட்டில் 3. தொல்காப்பியர் 4. தொம்சன்

14. ஊமம் நிகழ்த்தும் நடிகருக்கு அவசியமற்ற அபிநயம்

1. வார்ச்சிக அபிநயம் 2. ஆஹார்ய அபிநயம்
3. ஆங்கிக அபிநயம் 4. சாத்வீக அபிநயம்

15. பின்வருவனவற்றுள் கற்பனைப் பாத்திரமாக அமைவது.

1. மிருகங்கள் 2. பறவைகள 3. பேய்கள் 4. மனிதர்கள்

16. பின்வருவனவற்றில் வாழ்வியற் சடங்கு.

1. மரணச்சடங்கு 2. வேட்டைத்திருவிழா 3 சூரன்போர் 4. மானம்பூ

17. திருமணச் சடங்கின் உச்சநிகழ்வாகக் கொள்ளக்கூடியது.

1. தாலிகட்டுதல் 2. விருந்து
3. ஆசிவாங்குதல் 4. வார்த்தைப்பாடுகொடுத்தல்

18. மரணச்சடங்குகளில் காணப்படக்கூடிய நாடகப்பண்பு.

1. மரித்தவர் அலங்கரிக்கப்படல் 2. உறவுகளின் கதறல்
3. ஊர்வலம் 4. மேற்கூறியயாவும்

19. சங்கிலி நாடகம் ஒரு

1. வரலாற்று நாடகம் 2. சிறுவர் நாடகம்
3. . இலக்கிய நாடகம் 4. சமூக நாடகம்

20. உலக நாடகதினம் கொண்டாடப்படுவது

1. மார்ச் 27 2. ஜனவரி 27 3. பெப்ரவரி 27 4. ஏப்ரல் 27

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாவது வினாவுக்கும் ஏனையவற்றில் ஏதாவது 4 வினாவுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(01) 1. நாடகத்தின் பிரதான மூலகங்களில் ஒன்று தருக?
2. ஊமம் சார்ந்த அரங்கவிளையாட்டு ஒன்று தருக?
3. பாத்திர வகிபாகம் என்றால் என்ன?
4. மெய்நிலை என்றால் என்ன?
5. சிறுவர் நாடகங்கள் இரண்டு தருக?
6. சமூக நாடகங்கள் இரண்டு தருக?
7. புதிதளித்தல் என்றால் என்ன?
8. கைப்பொருட்கள் இரண்டு தருக?
9. வாழ்வியல் சடங்குகள் இரண்டு தருக?
10. அரங்கவிளையாட்டு என்றால் என்ன?

( 12 புள்ளிகள்)

(02) 1. வகிபாகம் என்றால் என்ன?

2. வைத்தியர் பாத்திரம் வகிக்கும் பல்வேறு வகிபாகங்களையும் ஒரு வரைபு மூலம் வரைந்து காட்டுக?

3. பாத்திர வகிபாகங்களுக்குமிடையில் பண்புகள் வேறுபடுகின்றது என்பதை மனங்கொண்டு உடல் உள ரீதியில் ஏற்படும் மாற்றங்களை உதாரணம் மூலம் எழுதுக

(3 +5 + 4= 12 புள்ளிகள்)

(03) 1. பாத்திரப்பண்புருவாக்கம் என்றால் என்ன?

2. பாத்திரப்பண்புருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?

3. பாத்திரமொன்றின் உளவியற் பண்புகளை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(04) 1. அரங்கவிளையாட்டு என்றால் என்ன?

2. அரங்கில் நடிகருக்குரிய பயிற்சிகள் எவை?

3. உமக்குத் தெரிந்த அரங்கவிளையாட்டுக்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு அவ்விளையாட்டு ஒன்றினை விளையாடும் முறையை விளக்கிக்கூறுக.

(2 + 3+ 7 = 12 புள்ளிகள்)

(05) பின்வருவனவற்றில் ஏதாவது மூன்று விடயங்களுக்கு சிறு குறிப்பு எழுதுக.

1. சிறுவர் நாடகம்
2. பாத்திர ஒன்றிப்பு
3. பாத்திரச்சித்தரிப்பு
4. புதிதளித்தல்

(3 x 4 = 12 புள்ளிகள்)

(06) 1. சடங்கு என்றால் என்ன?

2. சமயச் சடங்குகள் 3 தருக?

3. வாழ்வியல் சடங்குகளில் ஒன்றின் நாடகப் பண்புகளை விளக்குக?

(3 + 3 + 6 = 12 புள்ளிகள்)